**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 4 ஆம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண்.1/2025 ன் அசல் வழக்கு எண்.37/2013**

திருமதி. K. ரூக்மணி

...மனுதாரர்/2 ம் பிரதிவாதி /6 வது உத்தேச வாதி

..எதிர்..

1. K. பத்மநாபன் (இறந்தவர்)

2. திருமதி. ராஜலட்சுமி

3. N. காயத்ரி

4. P. கிரிதரன்

5. P. சரண்யன்

... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 ம் வாதிகள்

6. விஜயகுமார்

7. நளினி என்கிற கலா

8. V.K. சசிதரன்

9. V.K. சுதாமன்

10. உமாசந்திரன்

11. சுதர்சன் குமார்

12. ஓம் பச்சையம்மாள் டீலர்ஸ்

அதன் பங்குதாரர் திரு. N. பாஸ்கரன், என்பவரால் பிரதிநிதித்துவம்

செய்யப்பட்டது.

... 6 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/1, 3 முதல் 8 பிரதிவாதிகள்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.04 17:50:33 +0530

இம்மனு 01.04.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/2ம் பிரதிவாதி/6வது உத்தேச வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. பன்னீர்செல்வம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. A. பழனியப்பன், R. மோகன் மற்றும் K. வெங்கடேஷ்வரன் ஆகியோர் ஆஜராகியும், பின்னிட்டு எதிருரை ஏதும் தாக்கல் செய்யாமலும், 6, 8 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் / 1, 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் திரு. M.V. சேஷாச்சாரி மற்றும் M.K. முரளி ஆகியோர் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் திரு. G. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு எதிருரை ஏதும் தாக்கல் செய்யாமலும், 10, 11, மற்றும் 12 எதிர்மனுதாரர்கள்/6, 7 மற்றும் 8 பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி இறந்துவிட்ட நிலையிலும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.04 17:50:39 +0530

**<u>உத்தரவு</u>**

இம்மனு மனுதாரர்/2ம் பிரதிவாதி/6வது உத்தேச வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 பிரிவு 151ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் / 2ம் பிரதிவாதி / 6வது உத்தேச வாதி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>:–**

மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி மற்றும் 6வது உத்தேச வாதி ஆவார். மனுதாரர், 6வது வாதியாக தன்னை இடமாற்றம் செய்யக் கோரி, இ.ம. எண்.1 / 2024ஐ தாக்கல் செய்துள்ள அந்த மனு 11.08.2025 அன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. எனவே, மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

**3. <u>6வது எதிர்மனுதாரர்/1வது பிரதிவாதி தாக்கல் செய்து 8வது மற்றும் 9வது எதிர்மனுதாரர்கள்/4 மற்றும் 5வது பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–</u>**

எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவர். திருத்தல் மனுவில் புதிய வழக்கு ஒன்றை முழுவதுமாக அறிமுகப்படுத்த மனுதாரர்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.04 17:50:44 +0530

முயற்சிக்கிறார். இந்த மனுதாரர், வழக்குரையில் ஏராளமான திருத்தங்களை மேற்கொள்ளக் கோருகிறார். இது நடைமுறையில் முழு வழக்கையுமே மாற்றுவதற்கு சமமாகும். மேலும், 1 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரருடன் ஒத்துழைக்கவில்லை என்பதால், மனுதாரர் 1 முதல் 5ம் வாதிகளை வழக்கில் பிரதிவாதிகளாக இடமாற்றம் செய்து கொள்ளக் கோரியிருக்க வேண்டும். 1 முதல் 5ம் வாதிகளை பிரதிவாதிகளாக மாற்றுவதற்கான மனுவைத் தாக்கல் செய்யாமல், தற்போதைய மனு விசாரணைக்கு உகந்ததாக அமையாது. எனவே இந்த மனுவை செலவுத்தொகையுன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** 2 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5ம் வாதிகள் மற்றும் 7ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. 10, 11, மற்றும் 12 எதிர்மனுதாரர்கள்/6, 7 மற்றும் 8 பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டனர்.

**5. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–**

இந்த மனு மனுதாரரால் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.04 17:50:48 +0530

**6.** இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**<u>பிரச்சனை:–</u>**

**7.** இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி மற்றும் 6ம் உத்தேச வாதி ஆவர். 1 முதல் 5 எதிர்மனுதாரர்களான வாதிகள் விளம்புகை, பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது வழக்குரையை திருத்துவதற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர் / 2ம் பிரதிவாதி/6ம் உத்தேச வாதி இம்மனுவை தாக்கல் செய்து தன்னை, 6வது வாதியாக இடமாற்றம் செய்யக் கோரி, இ.ம. 1 / 2024 ஐ தாக்கல் செய்து அந்த மனு 11.08.2025 அன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் 6, 8 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள்/1, 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளால் மறுத்துரைக்கப்பட்டு திருத்த மனுவில் புதிய வழக்கு ஒன்றை முழுவதுமாக அறிமுகப்படுத்த மனுதாரர் முயற்சிப்பதாகவும் இந்த

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.04 17:50:54 +0530

மனுதாரர், வழக்குரையில் ஏராளமான திருத்தங்களை மேற்கொள்ளக் கோருவதாகவும் இது நடைமுறையில் முழு வழக்கையுமே மாற்றுவதற்கு சமமாகும் என்றும் மேலும், 1 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரருடன் ஒத்துழைக்கவில்லை என்பதால், மனுதாரர் 1 முதல் 5ம் வாதிகளை வழக்கில் பிரதிவாதிகளாக இடமாற்றம் செய்து கொள்ளக் கோரியிருக்க வேண்டும் என்றும் 1 முதல் 5ம் வாதிகளை பிரதிவாதிகளாக மாற்றுவதற்கான மனுவைத் தாக்கல் செய்யாமல், தற்போதைய மனு விசாரணைக்கு உகந்ததாக அமையாது என்றும் எனவே இந்த மனுவை செலவுத்தொகையுன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ள போதிலும் மனுதாரர் / 2ம் பிரதிவாதி / 6ம் உத்தேச வாதி மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு அசல் வழக்கில் திருத்தங்களை அனுமதிக்க வேண்டுவதற்கு கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தக்கவையாக அமைந்துள்ளது என்றும் அசல் வழக்கானது வழக்குரையை திருத்துவதற்காக நிலுவையில் உள்ள நிலையில் மனுவை அனுமதிப்பதாலேயே எதிர்மனுதாரர்களுக்கு இழப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் ஏற்கெனவே மனுதாரர் தாக்கல் செய்த இ.ம. 1/2024 11.08.2025 அன்று அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கில் முழுமையான தீர்வு காணும் வகையிலும் பல்வகை

G
BHUVANESWARI
Digitally signed
by G
BHUVANESWARI
Date: 2026.06.04
17:50:59 +0530

நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 4 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.04 17:51:04 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.04 17:51:10 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>
**இ.ம.எண்.1/2025 ன் அசல்**
**வழக்கு எண்.37/2013**
**நாள் 04.06.2026**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**